**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

Case No : No.535/2018
Depositon of Witness for Prosectuint/ Defence/ Court : CW : 1
Name : I.ஜோசப்பீட்டர் த/பெ. இன்னாசிமுத்து
Village : பாலகிருஷ்ணாபுரம்
Taluk : திண்டுக்கல்
Caste,Religion:
Calling, Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06-10-2022

முதல் விசாரணை

இந்த வழக்கின் புகார்தாரராகிய நான் எனது நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். மேற்படி சங்கதிகளை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன். கையெழுத்து என்னுடையதுதான்.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 13-07-2018 ம் தேதியிட்ட சிட்டி யூனியின் வங்கி, பல்லடம் கிளையில் 001063 என்ற எண்ணில் உள்ள காசோலை. |
| ம.சா.ஆ.2 | 31-07-2018 ம் தேதியிட்ட சிட்டி யூனியின் வங்கி, பல்லடம் கிளையில் 001064 என்ற எண்ணில் உள்ள காசோலை. |
| ம.சா.ஆ.3 | 15-07-2018 SBI வங்கி, திண்டுக்கல் கிளையில் 001063 எண்ணிட்ட காசோலையை வசூலுக்கு செலுத்திய கலெக்ஷன் செலான் அசல் |
| ம.சா.ஆ.4 | 17-07-2018 SBI வங்கி, திண்டுக்கல் கிளையில் 001063 என்ற எண்ணுள்ள காசோலையை வசூலுக்கு செலுத்தியதில் Fund Insufficient என்று அன்று திருப்பப்பட்ட குறிப்பாணை, |
| ம.சா.ஆ.5 | 01-08-2018 ஆம் தேதி SBI வங்கி, திண்டுக்கல் கிளையில் 001064 எண்ணிட்ட காசோலையை வசூலுக்கு செலுத்திய கலெக்ஷன் செலான் அசல் |
| ம.சா.ஆ.6 | 02-08-2018 SBI வங்கி, திண்டுக்கல் கிளையில் 001064 என்ற எண்ணுள்ள காசோலையை வசூலுக்கு செலுத்தியதில் Fund Insufficient என்று அன்று திருப்பப்பட்ட குறிப்பாணை, |
| ம.சா.ஆ.7 | 13.08.2018 ம் தேதி எதிரியிடம் காசோலைக்கான பணத்தை கேட்டு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் . |
| ம.சா.ஆ.8 | மேற்படி சட்ட அறிவிப்பை 18.08.2018 ஆம் தேதி மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் மறுத்து Refused return to Center என திருப்பப்பட்ட கவர் |
| ம.சா.ஆ.9 | புகார்தாரரின் 2016-2017 ஆம் ஆண்டிற்கான வருமானவரி கணக்கின் நகல் |
| ம.சா.ஆ.10 | புகார்தாரரின் 2017-2018 ஆம் ஆண்டிற்கான வருமானவரி கணக்கின் நகல் |
| ம.சா.ஆ.11 | புகார்தாரரின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான வருமானவரி கணக்கின் நகல் |
| ம.சா.ஆ.12 | புகார்தாரர் SBI வங்கிதிண்டுக்கல் கிளையில் 01.04.2018 ஆம் தேதி முதல் 09.09.2018 ஆம் தேதி வரையிலான கணக்கு வரவு செலவு பட்டியல் |

( ம.சா.ஆ-9 முதல் ம.சாஆ-12 வரையிலான ஆவணங்களை எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யபபடுகிறது)

மனுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

1. நானும், எதிரியும் 25.07.2017 ஆம்தேதி Paragon Passions என்ற பெயரில் பங்குதாரராக ஒப்பந்தம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். நாங்கள் எழுதிகொண்ட பங்குதாரர் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் Xerox நகல் நானும் எதிரியும் 25.07.2017 ஆம்தேதி Paragon Passions என்ற பெயரில் ஏற்படுத்திகொண்ட பங்குதாரர் ஆவணம் என்றால் சரிதான்.இந்த ஆவண பத்தி ஒன்பதில் என்னை Working Partner என்று மட்டுமே குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திலேயே நான் பார்க்கும் வேலைக்கு ரூபாய் 15000/-சம்பளமாக எடுத்துக்கொள்ளலாம் என்று குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. இந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது மற்றும் எதிரியுடையது என்றால் சரிதான். இந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஆம்சேபனை ஏதும் உண்டா என்றால், ஆட்சேபனை உண்டு. இதன் அசல் ஆவணம் எதிரியிடம் உள்ளது. இதன் Xerox நகல் ஒன்று என்னிடம் உள்ளது. இரண்டையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். என்னிடம் உள்ள Xerox நகலை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 16.03.2018 ஆம் தேதி என்னால் 50% மூலதனம் கொடுக்கவில்லை என்பதால் மீதி மூலதனத்திற்கு எதிரியின் மனைவி பரமேஸ்வரியை ஒரு பங்குதாரராக சேர்த்து ஒரு பத்திரம் எழுதிக்கொண்டோமா என்றால் எழுதிகொண்டோம்.

3. 16.03.2018 ஆம் தேதி போடப்பட்ட பங்குதாரர் பத்திரத்தில் பத்தி 9 என்னை Working Partner என்றும், அதற்காக எனக்கு மாதம் ரூபாய் 15000/- சம்பளமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்பு 17.03.2018 ஆம்தேதி நான் ஓய்வு பெற்றதாக Partnership Retirement Deed எழுதி கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் மேற்படி ஆவணங்களின் அசல் இல்லை. Xerox நகல்கள் தான் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் நான் தாக்கல் தயராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 17.03.2018 ஆம் தேதிய Partnership Retirement Deed-ல் சாட்சிகள் முன்னிலையில் 1 முதல் 5 நிபந்தனைகளில் கண்டுள்ள வாசகங்களை ஏற்றுக்கொண்டுதான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 5 நிபந்தனைகளுக்கான வாசகங்கள் தற்போது நினைவில் இல்லை. 25.07.2017 ஆம் தேதிய பங்குதாரர் பத்திரம் மற்றும், 16.03.2018 ஆம்தேதிய பங்குதாரர் பத்திரங்களில் பங்குதாரர்களுக்குள் எவ்வித பிரச்சனை ஏற்பட்டாலும், இசைவு தீர்ப்பாயத்தில் (Arbitration ) இசைவு தீர்ப்பாய சட்டத்தின்படி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. 17.03.2018 ஆம் தேதி Partnership Retirement Deed-ல் நான் மூலுதனமாக செலுத்திய பணம் மற்றும் பங்குதொகை முழுவதுமாக பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு வரவேண்டிய தொகை ரூ.25 இலட்சத்திற்கு பதிலாக ரூ.15 இலட்சத்துக்கு ஒப்புக்கொண்டு மூன்று காசோலைகள் பின்தேதியிட்டு கொடுத்தார். இந்த விஷயத்தை நான் புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படுவது நான் தாக்கல் செய்த நிரூபனவாக்குமூலம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பும் என்றால் சரிதான்.மேற்படி நிரூபண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் ரூ.25 இலட்சத்திற்கு பதிலாக ரூ.15 இலட்சம் கொடுக்க ஒப்புக்கொண்டதாக வாசகங்கள் உள்ளதா என்று புகார்தாரரிடம் நிரூபண வாக்குமூலத்தையும், வழக்கறிஞடா அறிவிப்பையும் காண்பித்து கேட்கப்பட்டது. ரூ.25 இலட்சத்திற்கு பதிலாக என்ற வாசகம் குறிப்பிடப்படவில்லை என்று பதிலளித்தார்.

5. 24.05.2018 ஆம் தேதி பல்லடம், காமநாயக்கன்பாளையத்தை சார்ந்த செந்தில் என்பவருடன் எதிரியின் அலுவலகத்திற்கு சென்று, பேச்சுவார்த்தை நடத்தியதாக நானே சுயார்ஜிதமாக நோட்டிஸ் ஒன்று பதிவு தபால் மூலம் எதிரிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி 24.05.2018 ஆம் தேதி அனுப்பிய அறிவிப்பின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி அறிவிப்பில் கண்ட விஷயங்கள் அனைத்தும் பொய் என்று மறுத்து , எதிரி 09.06.2018 ஆம் தேதி தனது வழக்கறிஞர் மூலம் பதலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்கண்ட எதிரி அனுப்பிய பதிலறிவிப்பு என்னிடம் உள்ளது, நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில், 22.06.2018 ஆம் தேதி நானும் எதிரியும் செய்த முடிவின்படி எனக்கு சர்வடக்கமாக ரூ.15 இலட்சத்தை தருவதாக ஒப்புக்கொண்டு, அதில் சொல்லியிருந்த காசோலைகளை அதில் நிரப்பப்பட்ட தேதிகளில் எதிரி தனக்கு கொடுத்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்று சொன்னால் அது தவறு.

6. 22.06.2018 ஆம் தேதியின் Paragon Passions என்ற நிறுவனத்தில் நான் பங்குதாரராக இல்லை என்றால் சரிதான். 22.06.2018 ஆம்தேதி Paragon Passions என்ற நிறுவனத்தின் பங்குதாரர்களாக யார் யார் இருந்தார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நானும், எதிரியும், எதிரியின் மனைவியும் Retirement Partnership Deed -ல் 17.03.2018 ஆம் தேதி எழுதிகொண்டபோது, எதிரியும் , அவரது மனைவியும் Paragon Passions நிறுவனத்தின் பங்குதாரர் என்றால் சரிதான். ம.சா ஆ-10 ஆக தாக்கல் செய்துள்ள 2017-2018 ஆம் ஆண்டிற்கான வருமானவரி கணக்கு ஆவணத்தின் நகல் பக்கம் 2-ல் Income from Salaries என்ற காலத்தில், Sahana Cloth Private Limited -என்ற நிறுவனத்தில் படிவம் 16-ன் படி ரூ.10,32,183/- சம்பளம் வாங்கியுள்ளதாக கணக்கு காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.2017-2018 ஆம் ஆண்டிற்குரிய வருமானவரிகணக்கில் Parogon Passions நிறுவனத்தில் பங்குதாரராகவோ, சம்பளம் பெற்றதாகவோ குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி Parogon Passions-ல் எனக்கு எந்த வருமானமும் கிடைக்காததால் நான் வருமான வரிக்கணக்கில் காட்டவில்லை. ம.சா.ஆ-11 2018-2019 ஆம் ஆண்டிற்கான வருமானவரி கணக்கு ஆவணத்தில் Sahana Cloth Private Limited -என்ற நிறுவனத்தில் படிவம் 16-ன் படி ரூ.6,18,858/- சம்பளம் வாங்கியுள்ளதாக கணக்கு காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 2018-2019 ஆம் ஆண்டிற்குரிய வருமானவரிகணக்கில் Parogon Passions நிறுவனத்தில் பங்குதாரராகவோ, சம்பளம் பெற்றதாகவோ எந்த ஒரு தொகையும் பெற்றதாகவோ காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி Parogon Passions-லிருந்து எதிரி மூலமாக எனக்கு எந்த வருமானமும், எந்த ஒரு தொகையும் கிடைக்காததால் நான் வருமான வரிக்கணக்கில் காட்டவில்லை.

7. நான் இவ்வழக்கில் எதிரி மூன்று காசோலைகள் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் 001062 என்ற காசோலையை 29.06.2018 ஆம் தேதியிட்டு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த காசோலையை 29.06.2018 ஆம் தேதி வசூலுக்கு செலுத்தி ரூ. 5 இலட்சம் பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று காசோலைகளையும் எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட தொகை ரூ.5 இலட்சத்தை ம.சா.ஆ.12 புகார்தாரர் SBI வங்கிதிண்டுக்கல் கிளையில் 01.04.2018 ஆம் தேதி முதல் 09.09.2018 ஆம் தேதி வரையிலான கணக்கு வரவு செலவு பட்டியலில் பக்கம் எண். 2-ல் 02.07.2018 ஆம் தேதி எனது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை நான் 2018-2019

ஆம் ஆண்டிற்குரிய வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி 001062 என்ற எண்ணுள்ள காசோலையில் பெற்ற ரூ.5 இலட்சத்தை 2019-2020 ஆம் ஆண்டுக்கான வருமான வரிக்கணக்கில் காட்டியுள்ளேன். நான் 2019-2020 ஆம் ஆண்டு வருமான வரிகணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(எதிரி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ம.சா -1-ன் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her to be correct.

(S/d.) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul